## Basic Tamil Notes Part 4

1. பிரித்தெழுதுக

| | | | |
|---|---|---|---|
| யாதெனின் | - | யாது | + எனின் |
| பொய்யாதொழுகின் | - | பொய்யாது | + ஒழுகின் |
| புறந்தூய்மை | - | புறம் | + தூய்மை |
| எனைத்தொன்றும் | - | எனைத்து | + ஒன்றும் |
| விளக்கல்ல | - | விளக்கு | + அல்ல |
| வேறொன்றும் | - | வேறு | + ஒன்றும் |

2. சேர்த்தெழுதுக

| | | | |
|---|---|---|---|
| தன் | + நெஞ்சு | - | தன்னெஞ்சு |
| புகழ் | + இல்லை | - | புகழில்லை |
| எனப்படுவது | + யாது | - | எனப்படுவதியாது |
| உள்ளத்துள் | + எல்லாம் | - | உள்ளத்துளெல்லாம் |

3. உரிய விடையைத் தேர்வு செய்க

அ. உடலை, நீர் தூய்மை செய்யும்; உள்ளத் தூய்மையை வெளிப்படுத்துவது ..........................

1) இன்னாச்சொல் **ஆ) வாய்மை** இ) பழி கூறாமை

ஆ. வாய்மை எனப்படுவது யாதெனில் ............................

1. **மற்றவர்களுக்குத் தீங்கு தாராச் சொற்களைப் பேசுதல்**
2. புறங்கூறாமை 3. பழி கூறாமை

4. பொருள் கூறுக

| | |
|---|---|
| புரை | - குற்றம் |
| சுடும் | - வருத்தும் |
| மெய் | - உண்மை |

5. எதிர்ச்சொல் எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாய்மை | x | பொய்ம்மை | தீமை | x | நன்மை |
| நன்று | x | தீது | அறம் | x | மறம் |
| புகழ் | x | இகழ் | இல்லை | x | உண்டு |
| புறம் | x | அகம் | நல்ல | x | கெட்ட |

6. கோடிட்ட இடங்களை நிரப்புக

அ. குறள் வெண்பாக்களால் ஆன நூல் **திருக்குறள்**

ஆ) திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன.

இ) உலகம் ஏற்கும் கருத்துகளைக் கொண்டுள்ளதால் திருக்குறள் **உலகப் பொதுமறை** என வழங்கப்படுகிறது.

ஈ) திருக்குறளில் வாய்மை அதிகாரம் **40ஆவது** அதிகாரமாய் **பொருட்** பாலில் உள்ளது.

7. பின்வரும் சொற்களைச் சொற்றொடர்களில் அமைக்க.

(இயற்கை, பெண்மை, வாய்மை, உள்ளம்)

இயற்கை - குற்றாலத்தில் உள்ள இயற்கைக் காட்சிகள் உள்ளத்தைக் கவர்கின்றன.

பெண்மை - பாரதியார் பெண்மையைப் போற்றிப் பாடியுள்ளார்

வாய்மை - வாய்மையே வெல்லும் என்ற தொடர் தமிழக அரசின் சின்னத்தில் உள்ளது.

உள்ளம் - குழந்தையின் உள்ளம் கள்ளம் புகா இடமாகும்.

1. பொருள் கூறுக

| | | |
|---|---|---|
| செவ்விய | - | சிறந்த |
| மொழிந்து | - | சொல்லி |
| ஞாலம் | - | உலகம் |
| புனைந்து | - | உண்டாக்கி |
| விழுமிய | - | மிகச்சிறந்த |
| தொன்னிலம் | - | மிகப்பழைய நிலம் |
| வெங்கதிரோன் | - | சூரியன் |
| பகுப்பு முறை | - | பிரித்துக் கூறும் முறை |

2. பிரித்து எழுதுக

| | | | | |
|---|---|---|---|---|
| மொழியியல் | - | மொழி | + | இயல் |
| தொன்னிலம் | - | தொன்மை | + | நிலம் |
| துணையின்றி | - | துணை | + | இன்றி |
| முதற்சங்கம் | - | முதல் | + | சங்கம் |
| பொருளிலக்கணம் | - | பொருள் | + | இலக்கணம் |

| | | | | |
|---|---|---|---|---|
| கொண்டதாக | - | கொண்டது | + | ஆக |
| எஞ்சியுள்ள | - | எஞ்சி | + | உள்ள |
| இயற்றமிழ் | - | இயல் | + | தமிழ் |
| வாழ்வியல் | - | வாழ்வு | + | இயல் |
| மூவகை | - | மூன்று | + | வகை |
| ஆறாயிரம் | - | ஆறு | + | ஆயிரம் |
| செம்மொழி | - | செம்மை | + | மொழி |
| பட்டியலிடுகிறார் | - | பட்டியல் | + | இடுகிறார் |
| அகப்பொருள் | - | அகம் | + | பொருள் |
| முத்தொள்ளாயிரம் | - | மூன்று | + | தொள்ளாயிரம் |
| நிலப்பகுதி | - | நிலம் | + | பகுதி |
| தோன்றியதென | - | தோன்றியது | + | என |
| இன்றியமையாதன | - | இன்றி | + | அமையாதன |
| வழக்கொழியாது | - | வழக்கு | + | ஒழியாது |
| பழஞ்சொல் | - | பழமை | + | சொல் |
| யாதொன்றும் | - | யாது | + | ஒன்றும் |
| தேவைக்கேற்ப | - | தேவைக்கு | + | ஏற்ப |
| துணையின்றி | - | துணை | + | இன்றி |
| இவ்வுண்மை | - | இ | + | உண்மை |
| தழைத்தோங்க | - | தழைத்து | + | ஓங்க |
| முத்தமிழ் | - | மூன்று | + | தமிழ் |
| நூற்றுக்கணக்கான | - | நூறு | + | கணக்கான |

3. எதிர்ச்சொல் எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பழமை | x | புதுமை | மறைந்தன | x | தோன்றின |
| இயற்கை | x | செயற்கை | சில | x | பல |
| இல்லை | x | உண்டு | இழுத்தது | x | விடுத்தது |
| மூழ்கியது | x | மிதந்தது | சிறப்பு | x | இழிவு |
| உண்மை | x | பொய் | குறைவு | x | மிகுதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒருமை | x | பன்மை | அகம் | x | புறம் |
| எளிது | x | கடிது | தோன்றி | x | மறைந்து |
| உயரிய | x | தாழ்ந்த | இருள் | x | ஒளி |
| வெம்மை | x | தண்மை | மென்மை | x | வன்மை |
| மெல்லோசை | x | வல்லோசை | மறுக்க | x | ஏற்க |

4. சொற்றொடரில் அமைத்து எழுதுக

**இயற்கை** - இயற்கை வளமிருந்தால் மனிதன் நலத்தோடு வாழ முடியும்.

பேச்சு வழக்கு - போலிச் சான்று கொடுத்துத் தேர்வு எழுதியவர்கள் மேற்படிப்புகான தகுதியை இழந்தனர்

**சான்று** - போலிச் சான்று கொடுத்துத் தேர்வு எழுதியவர்கள் மேற்படிப்புக்கான தகுதியை இழந்தனர்.

**வேலைப்பாடு** - தாராசுரக் கோவிலில் இருக்கும் வேலைப் பாடு அமைந்த சிற்பங்கள் மனத்தைவிட்டே அகலவில்லை.

**ஈர்த்தது** - தமிழாசியர் பாடம் நடத்தும் முறை எங்களை ஈர்த்தது.

**மேற்கோள்** - கட்டுரை எழுதும்போது அதில் மேற்கோள் காட்டி எழுதினார் மிகுந்த மதிப்பெண் கிட்டும்.

**தன்னேரிலாத** - உலகில் தன்னேரிலாத நாடாய் நம் நாட்டை உயர்த்தப் பாடுபடவேண்டும்.

திரிந்து - இன்று வீணே திரிந்து அலைபவர் நாளை வருந்தி அழ நேரிடும்.

**புனைந்து** - இளமையிலே கவிதை புனைந்து காட்டிப் புலவர்களிடம் 'பாரதி' எனப் பட்டம் பெற்றார், சுப்பிரமணிய பாரதி.

**இன்றியமையாதன** - இன்றியமையாதனவான கல்வியும் செல்வமும் வாழ்க்கைக்கு இரு கண்களாகும்.

**விழுமிய** - விழுமிய கருத்துகளைக் கொண்டிருப்பதால் திருக்குறள் உலகில் சிறந்து விளங்குகிறது.

1. உரிய விடையைத் தேர்வு செய்க

1. உலகமொழிகளுள் சிறந்து விளங்குவது

**அ) தமிழ்மொழி** ஆ) வடமொழி இ) மலையாளம்

2. அம்மை, அப்பன் என்னும் சொற்களை வழங்கும் நாடு

அ) கொங்கு நாடு ஆ) வருச நாடு **இ) நாஞ்சில் நாடு**

3. வாழ்வியலுக்கு இலக்கணம் கூறும் மொழி

அ) வடமொழி ஆ) தெலுங்கு மொழி **இ) தமிழ்மொழி**

4. எல்லாச் சொற்களும் ............................ குறித்தன என்பது தொல்காப்பிய நூற்பா.

அ) உயர் சொல்லைக் **ஆ) பொருள்** இ) அணி

5. இன்று பேச்சு வழக்கில் இல்லாத மொழிகள் ...................

அ) கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு

ஆ) இலத்தீன், சீனம், சமற்கிருதம்

**இ) கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம்**

6. தமிழ் அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித் தட்டு என்று கூறியவர் ....................

அ) போப் **ஆ) டாக்டர் கிரௌல்** இ) வள்ளலார்

7. தமிழ் ...................... மொழியாய் இருக்கிறது.

அ) வல்லோசை ஆ) இன்னோசை **இ) மெல்லோசை**

8. இசையும் நாடகமும் இயற்றமிழோடு இணைந்து .................. என வழங்கப்பட்டு வரலாயின.

அ) செம்மொழி ஆ) தனித்தமிழ் மொழி **இ) முத்தமிழ்**

2. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. உலகில் மிகப்பழைமையான நிலப்பகுதி <u>குமரிக்கண்டம்</u>
2. தமிழில் <u>இடுகுறிப்</u> பெயர்களை மிகவும் குறைவு
3. எல்லா மொழிகளும் எழுத்துக்கும் <u>சொல்லுக்கும்</u> இலக்கணம் கூறும்.
4. புலவர்கள் செய்யுளுக்குச் சிறப்புச் சேர்க்க உவமை <u>உருவகம்</u> ஆகியவற்றைப் பயன்படுத்தி அழகு சேர்த்தனர்.
5. குமரிக்கண்ட நிலப்பகுதி <u>கடற்கோளால்</u> மூழ்கிவிட்டது.
6. பொருளிலக்கணம் <u>அகம், புறம்</u> என இருவகையாய்ப் பகுக்கப்பட்டுள்ளது.
7. தமிழில் <u>ஒருமை, பன்மை</u> என இருவகை எண் மட்டுமே உண்டு
8. மக்களுக்கு <u>ஒழுக்க</u> வரம்பு தேவை; மொழிக்கு <u>இலக்கண</u> வரம்பு தேவை.
9. தமிழ் தனித்து இயங்குவதோடு தழைத்தோங்கும் என்று கூறியவர் <u>கால்டுவெல்</u>
10. <u>தமிழ்ச்சொல்</u> இல்லாத உலகப் பெருமொழி யாதொன்றும் இல்லை.
11. வழங்கொழியாமலும் இளமை மாறாமலும் <u>கன்னித்தமிழ்</u> இருந்து வருகின்றது.
12. டாக்டர் கிரௌல், தமிழ் என்னை <u>ஈர்த்தது</u> குறளோ என்னை <u>இழுத்தது</u> என்றார்.

அ. வல்லினம் மிகும் இடங்கள்

1. சுட்டெழுத்துகள் என்றாள் என்ன? அவை யாவை? சான்று தருக

ஒன்றைச் சுட்டிக்காட்டப் பயன்படும் எழுத்துகள் சுட்டெழுத்துகள் எனப்படும். அவை அ, இ, உ என்பன. இவை சொல்லுக்கு முதலில் வந்து சுட்டிக் காட்டப் பயன்படும்.

சான்று : அது, இவை, உப்பக்கம், அவன், இவர், உது

2. வல்லெழுத்துகளுக்கு முன் சுட்டெழுத்துகள் வந்தால் எவ்வாறு புணரும்? சான்று தருக

சுட்டெழுத்துகளின் முன் வல்லின எழுத்துகளை முதலாய் உடைய சொற்கள் வந்தாள் அவற்றுக்கு இடையில் அவ்வல் லெழுத்துகளின் மெய்யெழுத்துக் தோன்றும்.

சான்று :

அ + சட்டை = அச்சட்டை
அ + குடம் = அக்குடம்

இ + குளம்= இக்குளம்
அ + கூட்டம் = அக்கூட்டம்

உ + பக்கம் = உப்பக்கம்
அ + பெட்டி = அப்பெட்டி

இ + சிறுமி = இச்சிறுமி

இ + தோப்பு = இத்தோப்பு

இ + புத்தகம் = இப்புத்தகம்

3. 'எ' என்னும் வினா எழுத்துக்குமுன் வல்லின எழுத்துகள் வந்தால் எவ்வாறு புணரும் ?

எ + குடம் = எக்குடம்
எ + பள்ளி = எப்பள்ளி

எ + சட்டை = எச்சட்டை
எ + சட்டம் = எச்சட்டம்

எ + குதிரை = எக்குதிரை
எ + குழந்தை = எக்குழந்தை

எ + பக்கம் = எப்பக்கம்

ஆ. தமிழ் எண்களை அறிவோம்

| அரபு எண் | தமிழ் எண் | அரபு எண் | தமிழ் எண் |
|---|---|---|---|
| 1 | க | 6 | சா |
| 2 | உ | 7 | எ |
| 3 | ங | 8 | அ |
| 4 | ச | 9 | சா |
| 5 | ரு | 10 | க0 |

அ. பொருள் கூறுக.

1. பண் இசை
2. அகம் உள்ளம்

ஆ. பிரித்து எழுதுக.

1. யாதொன்றும் - யாது + ஒன்றும்
2. பயக்குமெனின் - பயக்கும் + எனின்

இ. கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுத்து எழுதுக.

1. உலகின் மிகப்பழைமையான நிலப்பகுதி ..................................

அ) தக்காணப் பீடபூமி **ஆ) குமரிக்கண்டம்** இ) தார்ப்பாலைவனம்

2. தனித்து இயங்கும் எழுத்துகள் .......................

அ) சார்பெழுத்து ஆ) ஆய்தஎழுத்து **இ) முதலெழுத்து**

ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. திரு.வி.க நவசக்தி இதழின் ஆசிரியராய் இருந்தார்.
2. ஆற்றூர் - பேச்சுவழக்கில் ஆத்தூர் என மருவியுள்ளது.

உ. ஓரிரு சொற்களில் விடையளிக்க.

1. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?

**விடை** : உள்ளம் அறியப் பொய்யில்லாமல் நடப்பவன்.

2. தமிழ்மொழியின் செவ்வியல் இலக்கியங்கள் நான்கனை எழுதுக.

**விடை** தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம்.

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ. புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

ஆ. ‘நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே’ என்னும் பாடலைப் பாடியவர் மோசிகீரனார்.

2. உரிய விடையைத் தேர்வு செய்க

அ. மோசிகீரனார் உடல் சோர்வினால் முரசுக்கட்டிலில் உறங்கிய போது கவரி வீசிய மன்னன் ..............................

அ. பாண்டியன் நெடுஞ்செழியன் ஆ. கோப்பெருஞ் சோழன்

**இ. சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை**

3. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.

நெல், உயிர், நீர், வேந்தன்

நெல் - தஞ்சை, தமிழகத்தின் நெல் களஞ்சியமாய்த் திகழ்கிறது.

உயிர் - கடல்நீர் மேகமாகி மழையாய்ப் பெய்கிறது.

வேந்தன் - வேந்தன் நடுநிலை தவறாது ஆட்சி செய்ய வேண்டும்.

1. பிரித்தெழுதுக.

| | | |
|---|---|---|
| மக்கட்கெல்லாம் | - | மக்கட்கு + எல்லாம் |
| பிணியின்மை | - | பிணி + இன்மை |
| குலனுடைமை | - | குலன் + உடைமை |

2. எதிர்சொல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மேதை | x | பேதை | இளமை | x | முதுமை |
| மறத்தல் | x | நினைத்தல் | சிறுகுதல் | x | பெருகுதல் |

பொருள் கூறுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆர்கலி | - | ஆரவாரம் | கற்பு | - | கல்வி |
| ஓதல் | - | கற்றல் | செற்றார் | - | பகைவர் |
| காதல் | - | அன்பு | மெய் | - | உடல் |
| வண்மை | - | வளமை | சிறுகாமை | - | குறையாமை |
| பிணி | - | நோய் | | | |

1. கோடிட்ட இடங்களை நிரப்புக

அ. முதுமொழிக்காஞ்சி என்பது <u>காஞ்சித்</u> திணையின் துறைகளுள் ஒன்று.

ஆ. முதுமொழிக்காஞ்சியின் ஆசிரியர் <u>மதுரைக்கூடலூர் கிழார்</u>

இ. இளமையைக்காட்டிலும் <u>நோயற்ற வாழ்வே</u> சிறந்தது.

2. உரிய விடையைத் தேர்வு செய்க.

அ. முதுமொழிக்காஞ்சி <u>அறிவுரைக்கோவை</u> என வழங்கப்பெறும்

ஆ. கற்றலைவிடவும் சிறந்தது ..........................

1. அறிவுடைமை 2. பொறையுடைமை

**3. ஒழுக்கமுடைமை**

3. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைக்க.

உலகம், மக்கள், ஒழுக்கம், வழிபடுதல்

உலகம் - உலகம் உருண்டையானது என்று முதலில் அறிந்தவர் கலீலியோ ஆவார்.

மக்கள் - மக்கள் அனைவரும் கல்வி பெற்றவராய் இருக்க வேண்டும்.

ஒழுக்கம் - ஒழுக்கம் உயிரினும் மேலானது.

வழிபடுதல் - இறைவனை மனம், மொழி, மெய் ஆகியவற்றால் வழிபடுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| உறையுள் | - | தங்குமிடம் |
| வித்துவான் | - | புலவர் |
| தலபுராணம் | - | தெய்வத்தலத்தின் வரலாறு |
| கைம்மாறு | - | பதிலுதவி |
| நயம் | - | நுண்மை |
| ஈர்த்தார் | - | இழுத்தார் |
| மதுரம் | - | இனிமை |

4. எதிர்ச்சொல் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துன்பம் | x | இன்பம் | பலர் | x | சிலர் |
| பெருமை | x | சிறுமை | தொடக்கம் | x | இறுதி |
| புகழ் | x | இகழ் | நிறை | x | குறை |
| இளமை | x | முதுமை | இறுதி | x | தொடக்கம் |

5. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

சுருக்கமாய், பெருமையடைவர், நயமும் சுவையும், பெருமைக்கும் புகழுக்கும், சாதி சமயம்

1. சுருக்கமாய் - நாம் பிறரிடம் பேசும்பொழுது சுருக்கமாய்ப் பேசவேண்டும்.
2. பெருமையடைவர் - நன்மக்களால் பெற்றோர் பெருமையடைவர்.
3. நயமும் சுவையும் - நயமும் சுவையும் மிக்க பாடல்களை இயற்றுதல் வேண்டும்.
4. பெருமைக்கும் புகழுக்கும் - ஒவ்வொருவர் பெருமைக்கும் புகழுக்கும் அவரவர் நடத்தையே காரணம்.
5. சாதி சமயம் - சாதி சமயம் பாராது நட்புக்கொள்ளல் வேண்டும்.

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   1. உ.வே. சாமிநாதரின் ஆசிரியர் பெயர் மீனாட்சிசுந்தரனார்
   2. நோய்க்கு மருந்து இலக்கியம் என்பார், மீனாட்சிசுந்தரனார்.
   3. மீனாட்சிசுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் வல்லவர்.
2. சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
   1. தேமதுரத் தமிழை உலகெலாம் ..................... செய்தார்கள்.

(**பரவச்**/பறவச்)

2. சாமிநாதரின் புகழுக்குக் ................... அமைந்தவர் மீனாட்சி சுந்தரனார்.

(**காரணமாய்**/காரனமாய்)

3. மீனாட்சிசுந்தரனார், மாணவர் சிலருக்கு உண்டியும் உறையுளும் ................................ கற்பித்தார்.

(**அளித்துக்**/அலித்துக்)

4. சாமிநாதர் பிற்காலத்தில் அடைந்த ..................... தமது ஆசிரியர் பால் வைத்திருந்த அன்பே காரணமாய் இருந்தது.

(புகளுக்குத்/**புகழுக்குத்**)

ஆ. சேர்த்தெழுதுக

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்று | + | ஆண்டு | - | மூன்றாண்டு |
| பள்ளி | + | ஒன்றில் | - | பள்ளியொன்றில் |
| கணிதம் | + | திறமை | - | கணிதத்திறமை |
| மதிப்பு | - | இல்லை | - | மதிப்பில்லை |

இ. பிரித்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| தேர்ச்சியடைய | - | தேர்ச்சி | + | அடைய |
| விடவில்லை | - | விட | + | இல்லை |
| ஊதியமில்லா | - | ஊதியம் | + | இல்லா |
| பொருட்படுத்தாத | - | பொருமை | + | ஆசிரியர் |
| காத்திருந்த | - | காத்து | + | இருந்த |
| கரும்பலமை | - | கருமை | + | பலகை |
| இப்பட்டம் | - | இ | + | பட்டம் |
| உடனிருந்து | - | உடன் | + | இருந்து |

ஈ. எதிர்ச்சொல் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மெய் | x | பொய் | தொடங்கினார் | x | முடித்தார் |
| இடப்பக்கம் | x | வலப்பக்கம் | பலவற்றை | x | சிலவற்றை |
| பிரிந்தது | x | சேர்ந்தது | தவறு | x | சரி |
| சுருக்கம் | x | விரிவு | பெருமை | x | சிறுமை |

அ. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கணிதமேதை எனப் போற்றப்படுபவர் இராமானுஜம்
2. சுழியத்திற்கு மதிப்பில்லை எனச் சொல்வதற்கில்லை.
3. இந்தியக் கணிதக்கழகப் பத்திரிகையில் வெளியான இராமானுஜத்தின் கட்டுரை பெர்னௌலிஸ் எண்கள்
4. இராமானுஜத்தை இங்கிலாந்திற்கு வரவழைக்க ஏற்பாமு செய்தவர் ஹார்டி என்பார்
5. இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் இராமானுஜத்திற்கு வழங்கிய பட்டம் எ.ஃப் ஆர். எஸ்
6. இராமானுஜத்தைக் காண வந்த ஹார்டியின் 'டாக்சி' எண் 1729

1. சரியான வார்த்தையை தேர்ந்தெடுக.

1. இராமானுஜத்தைக் காஞ்சிபுரத்திலிருந்த ........................ பள்ளி யொன்றில் சேர்த்தார்.

(**திண்ணைப்**/தின்னைப்)

2. வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம் இராமானுஜம் கணிதத் திறமையை ....................... செய்தார்.

(வெலிக்காட்டவும் / **வெளிக்காட்டவும்**)

3. இராமானுஜம் ............................ எண்ணி அனைவரும் வியந்தனர்.

(அரிவுத்திறமையை / **அறிவுத்திறமையை**)

5. இராமானுஜம் 200 பவுண்டை ..................... மாணவர்களுக்கு வழங்குமாறு கடிதம் எழுதினார்.

(ஏளைஎலிய / **ஏழைஎளிய**)

2. பொருத்துக.

1. கணித மேதை - அ. ஹார்டி
2. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர் - ஆ. ஈ.எச். நெவில்
3. திரினிட்டி கல்லூரியின் பேராசிரியர் - இ. இராமானுஜம்

**விடை**

1. கணித மேதை - இராமானுஜம்
2. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர் - ஹார்டி
3. திரினிட்டி கல்லூரியின் பேராசிரியர் - ஈ.எச். நெவில்

1. உரிய விடையைத் தேர்வு எழுதுக,

1. திண்ணைப்பள்ளியில் படித்த ஊர் ...............................

அ) கும்பகோணம் **ஆ) காஞ்சிபுரம்** இ) ஈரோடு

2. இராமானுஜம் ஆசிரியரிடம் .......................... மதிப்புடையது என வாதிட்டார்.

அ) ஒன்று ஆ) நூறு **இ) சுழியம்**

3. இராமானுஜம் ................................ இல் எழுத்தர் பணிபுரிந்தார்

அ) கல்லூரி **ஆ) துறைமுகம்** இ) பள்ளி

2. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. உயர்கல்வி பெற இராமானுஜம் இங்கிலாந்து சென்றார்.

2. சென்னைத் துறைமுகம் சார்பில் குடிநீர்க்கப்பலுக்கு சீனிவாச இராமானுஜம் எனப் பெயரிடப்பட்டது.

3. இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் நிறுவப் பட்டுள்ள இடம் சென்னை

நாடு, ஊர் - இடப்பெயர்

சித்திரை - காலப்பெயர்

தோள், கை, இலை - சினைப்பெயர்

கருமை, வட்டம் - பண்புப்பெயர்

ஓதல், நடத்தல் - தொழிற்பெயர்

வினைச்சொல்

உண்டான், படித்தான், ஆடினாள் - வினைமுற்றுகள்

உண்ட, வளைந்த, ஓடிய - பெயரெச்சங்கள்

வாழ்க, வாழிய - வியங்கோள் வினைமுற்று

உண்டு, ஆடி, படித்து - வினையெச்சங்கள்

அவன் பொன்னன் - அவள் கூனன் - குறிப்பு வினை முற்றுகள்.

1. முருகன் மாமரத்தைப் பிளந்தான் - இந்த முற்றுச் சொற்றொடரில் உள்ள சொற்களை வகைப் படுத்திக் காட்டுக.

அ. முருகன் - பெயர்ச்சொல்

ஆ. மாமரத்தை (ஐ) - இடைச்சொல்

இ. பிளந்தான் - வினைச்சொல்

2. பார்த்திபனும் பாரதியும் பள்ளியை அடைந்தனர் - இந்த முற்றுச் சொற்றொடரில் சொற்களை வகைப்படுத்திக் காட்டுக.

பார்த்திபனும் (உம்) - இடைச்சொல்

பாரதியும் (உம்) - இடைச்சொல்

பள்ளியை (ஐ) - இடைச்சொல்

அடைந்தனர் - வினைச்சொல்

3. ஆலயம் தொழுவது சாலவும் நன்று - இந்த முற்றுச்சொற்றொடரில் உள்ள சொற்களை வகைப்படுத்திக் காட்டுக.

அ. ஆலயம் - பெயர்ச்சொல்

ஆ. தொழுவது - பெயர்ச்சொல் (தொழிற்பெயர்)

இ. சால - உரிச்சொல்

ஈ. சாலவும் (உம்) - இடைச்சொல்

உ. நன்று - வினைச்சொல்

பொருத்துக.

அ. பெயர்ச்சொல் - வந்தான்

ஆ. வினைச்சொல் - ஐந்தும் ஆறும்

இ. இடைச்சொல் - தவச்சிறிது

ஈ. உரிச்சொல் - வேலன்

**விடை**

அ. பெயர்ச்சொல் - வேலன்

ஆ. வினைச்சொல் - வந்தான்

இ. இடைச்சொல் - ஐந்தும் (உம்) ஆறும் (உம்)

ஈ. உரிச்சொல் - தவச்சிறிது

5. உரிச்சொற்களை எழுதுக.

மாநகர், தவப்பிஞ்சு, கடிமனை, தடமருப்பு

**விடை:** மா, தவ, கடி, தட

6. இடைச்சொற்களை எழுதுக.

மரத்தை - ஐ, அன்பிற்கும் - உம்

அ. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. காளமேகப்புலவர் <u>திருவரங்கக்</u> கோவிலில் பணிபுரிந்தார்.

2. இராமானுஜத்தின் கட்டுரைகள் <u>பெர்னௌலிஸ் எண்கள் என்னும்</u> தலைப்பில் வெளியானது.

ஆ. கோடிட்ட இடத்தில் உரிய விடையை எடுங்கத்து எழுதுக.

1. தனிப்பாடல் திரட்டு என்னும் நூலைத் தொகுத்தவர் ..................................

அ. மோசிகீரனார் ஆ. காளமேகப்புலவர்

**இ. சந்திரசேகர கவிராசப்பண்டிதர்**

2. இலண்டனிலுள்ள ...................... கல்லூரியில் இராமானுஜம் ஆராய்ச்சி மாணவராய்ச் சேர்ந்தார்.

**அ. திரினிட்டி** ஆ. ஆக்ஸ்போர்டு இ. ஹார்வார்டு

3. மாநகர் என்பது ........................

அ. பெயர்ச்சொல் ஆ. வினைச்சொல் **இ. உரிச்சொல்**

4. கிழவிக்கு மருதுபாண்டி அளித்த ஊர் ......................

அ. சிவகங்கை ஆ. திருநெல்வேலி

**இ. பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல்**

இ. கீழ்க்காணும் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. வழிமுறை : வழிமுறை வழிமுறையாய் வரும் வழக்கங்களை மக்களால் எளிதில் கைவிட இயலாது.

2. சிந்தித்தவாறு : அவன் எதையோ சிந்தித்தவாறு நெடுந்தொலைவு நடந்தான்.

அ. கீழ்க்காணும் வினாக்களுக்குச் சுருக்கமாய் விடையளிக்க.

1. பல்லூடகங்கள் யாவை?

**விடை:** அலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, கணினி, செய்தித்தாள்கள்

2. நீங்கள் நாள்தோறும் பயன்படுத்தும் ஊடகங்கள் யாவை?

**விடை:** தொலைக்காட்சி, செய்தித்தாள்கள்

3. ஊடகங்களினால் ஏற்படும் இடர்ப்பாடுகளையும் தொல்லைகளையும் எவ்வாறு தவிர்க்கலாம்?

**விடை:** குறிப்பிட்ட நேரங்களில், பயனுள்ள காட்சிகளைக் காண்பதன்மூலம்.

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

1. பால்பற்றிச் சொல்லா விடுதலும் - இவ்வடியில் பால்பற்றி என்பதன் பொருள் ................

அ. பகுப்புப்பற்றி ஆ. இனம்பற்றி **இ. ஒருபக்கச் சார்புபற்றி**

2. 'நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும்' - இவ்வடியில் வழி என்னும் பொருள்தரும் சொல் ...............

அ. நில்லாமை **ஆ. நெறி** இ. உள்

3. வனப்பு என்னும் சொல்லின் பொருள் ..............................

**அ. அழகு** ஆ. அறிவு இ. வளமை

4. தூற்றின்கண் தூவிய வித்து - இதில் தூற்றின் என்பதன் பொருள்

அ. தூற்றுதல் **ஆ. புதர்** இ. விதை

2. பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| இம்மூன்றும் | - | இ | + மூன்றும் |
| ஒன்றீயும் | - | ஒன்று | + ஈயும் |
| நன்றறியும் | - | நன்று | + அறியும் |

1. பொருள் எழுதுக.

| | | |
|---|---|---|
| மெத்த | - | மிகுந்த |
| ஈர்ப்பான | - | கவர்ச்சியான |
| இணக்கம் | - | இசைவு |
| வளமுற | - | செழிப்புற |
| சீற்றம் | - | சினம் |
| இன்றியமையாதது | - | முக்கியமானது |
| குலைத்துவிடும் | - | அழித்துவிடும் |

2. சேர்த்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| மகிழ்ச்சி | + அடைகிறேன் | - | மகிழ்ச்சியடைகிறேன் |
| அடி | + தளம் | - | அடித்தளம் |
| அ | + மொழி | - | அம்மொழி |
| அறிவு | + உள்ளவர் | - | அறிவுள்ளவர் |
| ஐயம் | + இன்றி | - | ஐயமின்றி |

3. பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| பழமொழி | - | பழமை | + மொழி |
| நம்மிடையே | - | நம் | + இடையே |
| தெரிந்தறியாத | - | தெரிந்து | + அறியாத |
| என்பதில்லை | - | என்பது | + இல்லை |
| தேவையில்லை | - | தேவை | + இல்லை |

| | | | |
|---|---|---|---|
| மொழியிடம் | - | மொழி | + இடம் |
| பெற்றிருக்க | - | பெற்று | + இருக்க |

4. எதிர்ச்சொல் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விரும்பினேன் | x | வெறுத்தேன் | தோன்றி | x | மறைந்து |
| நிறைவான | x | குறைவான | இணக்கமான | x | எதிர்ப்பான |
| உயர்வு | x | தாழ்வு | மிகுந்த | x | குறைந்த |
| தாய்மொழி | x | அயல்மொழி | இல்லை | x | உண்டு |
| இயற்கை | x | செயற்கை | பெறுவது | x | கொடுப்பது |

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. காந்தியடிகள் <u>குஜராத்</u> மாநிலத்தில் ஆற்றிய உரை குழந்தைகளுக்குக் கடிதமாய்க் கொடுக்கப்பட்டுள்ளது.
2. ஒரு மொழியின் தன்மை <u>மக்களின்</u> தன்மையைப் பொறுத்தே அமையும்.
3. வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின்மீது <u>சீற்றம்</u> கொண்டானாம்.
4. பயிற்றுமொழியைக் குறித்துச் சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது, <u>அடித்தளம்</u> இல்லாமல் கட்டடம் எழுப்புவது போன்றது.
5. மதன்மோகன் மாளவியாவின் தாய்மொழிப்பேச்சு <u>தங்கத்தைப்</u> போன்று ஒளி வீசும்.
6. மக்கள் <u>அறிவு</u> உள்ளவர்களாய் இருந்தால், அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும்.
7. பள்ளிக்கூடம் <u>வீட்டைப்</u> போன்று இருக்க வேண்டும்.
8. வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும் பள்ளியில் ஏற்படும் எண்ணங்களுக்கும் இடையே நெருங்கிய <u>தொடர்பு</u> இருக்க வேண்டும்.
9. அயல்மொழியினிடம் ஒரு பற்றுதலைத் தோற்றுவிப்பதோ ஊக்கம் அளிப்பதோ <u>தேவையில்லை</u>

1. கீழுள்ள சொற்களுள் காரணப்பெயர்களை கோடிடு.

அ. காற்று    <u>ஆ. பறவை</u>    <u>இ. முக்காலி</u>    <u>ஈ. அரிவாள்</u>    உ. மரம்

<u>ஊ. வளையல்</u>    எ. கடல்    ஏ. மழை

1. உரிய விடையைத் தேர்வு செய்து எழுதுக.

1. பெட்டி என்பது .......................... ஆகும்

**அ. இடுகுறிப்பெயர்**    ஆ. காரணப்பெயர்    இ. சுட்டுப் பெயர்

2. சித்திரை மாதத்தில் பிறந்ததனால் .......................... என அழைக்கப்பட்டான்.

**அ. சித்திரையான்** ஆ. கார்த்திகேயன் இ. அமாவாசை

3. காரணச் சிறப்புப்பெயர் .......................... ஆகும்.

**அ. வளையல்** ஆ. மண் இ. நண்டு

4. காரணப் பொதுப்பெயர் ............................... ஆகும்.

அ. நாற்காலி ஆ. பலா **ஈ. அணி**

2. பொருத்துக.

| | | |
|---|---|---|
| இடுகுறிப் பொதுப்பெயர் | - | மரங்கொத்தி |
| இடுகுறிச் சிறப்புப்பெயர் | - | பறவை |
| காரணப் பொதுப்பெயர் | - | காடு |
| காரணச் சிறப்புப்பெயர் | - | பனை |

**விடை:**

| | | |
|---|---|---|
| இடுகுறிப் பொதுப்பெயர் | - | காடு |
| இடுகுறிச் சிறப்புப்பெயர் | - | பனை |
| காரணப் பொதுப்பெயர் | - | பறவை |
| காரணச் சிறப்புப்பெயர் | - | மரங்கொத்தி |

அ. வழக்குச்சொற்களை நீக்கித் திருத்தமான சொற்களை எழுதுக.

1. பள்ளிக்கு அருகாமையில் என் வீடு இருக்கிறது.

**விடை:** பள்ளிக்கு அருகில் என் வீடு இருக்கிறது.

2. என் வீட்லே யாருமே இல்லே.

**விடை:** என் வீட்டிலே எவருமே இலர்

3. எம் ஊர் ஆத்துலே தண்ணியே இல்லே.

**விடை:** எம் ஊர் ஆற்றில் தண்ணீரே இல்லை.

4. என் அப்பா அதிகமா சிலவு செய்கிறார்.

**விடை:** என் அப்பா அதிகமாய்ச் செலவு செய்கிறார்

ஆ. கீழ்க்காணும் முற்றுச்சொற்றொடரில் அமைந்துள்ள வழுக்களைத் திருத்தி எழுதுக.

1. அரசர் பலர் வந்தார்கள்.

**விடை:** அரசர் பலர் வந்தனர்

2. மயில்கள் ஆடியது.

**விடை**: மயில்கள் ஆடின

3. கனிமொழி பாடம் படித்தாய்.

**விடை**: கனிமொழி பாடம் படித்தாள்.

4. ஔவையார் அதியமானிடம் பரிசில் பெறச் சென்றாள்.

**விடை**: ஔவையார் அதியமானிடம் பரிசில் பெறச் சென்றார்.

5. வயலில் மாடுகள் மேய்ந்தது.

**விடை**: வயலில் மாடுகள் மேய்ந்தன.

இ. உரிய தமிழ் எண்களைத் தேர்வு செய்க.

1. மூன்று என்பதன் தமிழெண்

**அ. ௩** ஆ. அ இ. க

| | | |
|---|---|---|
| இடுகுறிச் சிறப்புப்பெயர் | - | பனை, பலா, அவரை |
| காரணப் பொதுப்பெயர் | - | அணி, அரும்பு |
| காரணச் சிறப்புப்பெயர் | - | ஊருணி |
| இடுகுறிப் பொதுப்யெர் | - | ஆறு, ஆடு, மாடு |

1. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நல்லாதனார் இயற்றிய நூல்

**அ. திரிகடுகம்** ஆ. புறநானூறு

இ. திருவாரூர் நான்மணிமாலை

2. நல்லாதனார் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்?

அ. மதுரை ஆ. கோவை **இ. திருநெல்வேலி**

3. இரவீந்திரநாத தாகூரின் ஈர்ப்பான் இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம்

அ. ஆங்கில அறிவு **ஆ. தாய்மொழி அறிவு** இ. வடமொழி அறிவு

4. தங்கத்தைப் போன்று ஒளி வீசுகின்ற பேச்சு யாருடையது?

அ. முன்சிராம் ஆ. காந்தியடிகள் **இ. மதன்மோகன் மாளவியா**

5. பெரியவரின் தருமக்கணக்கில் செலவழித்துள்ள பணம்

**அ. இருபத்து இரண்டாயிரம்** ஆ. இருபத்து மூன்றாயிரம்

இ. இருபத்து நான்காயிரம்

6. காரணம் கருதி இடப்படும் பெயர்கள்

அ. இடுக்குறிப்பெயர்கள் **ஆ. காரணப்பெயர்கள்**

இ. இடுகுறிப்பொதுப்பெயர்

2. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. நம் முன்னோர்கள் எந்தக் காரணமும் கருதாமல் ஒரு பொருளுக்குக் குறியீடாய் இட்ட பெயர் <u>இடுகுறிப்பெயர்</u>

2. 'நற்காலி' என்னும் சொல் <u>காரணப்</u> பெயராகும்

3. 'மரம்' என்னும் சொல் <u>இடுகுறிப்பொதுப்</u> பெயராகும்.

4. 'குயில்' என்னும் சொல் <u>இடுகுறிச்சிறப்புப்</u> பெயராகும்.

2. உரிய விடையைத் தேர்வு செய்க.

1. நான்மணிமாலை என்பது ...............................

அ. பதினெண்கீழ்க்கணக்கு ஆ. காப்பியம் **இ. சிற்றிலக்கியம்**

2. மண் சுமந்தார் எனக் குறிப்பிடப்படுபவர் ...............................

அ. திருமால் **ஆ. சிவபெருமான்** இ. நான்முகன்

3. பூங்கோவில் என்பது ...............................

அ. மதுரையில் உள்ள கோவில் **ஆ. திருவாரூர்க் கோவில்**

இ. திருச்சி உச்சிப்பிள்ளையார் கோவில்

3. பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| அ. பூங்கோவில் | - | பூ | + கோவில் |
| ஆ. புடைத்தென்னார் | - | புடைத்து | + என்னார் |
| இ. என்றுருகுவார் | - | என்று | + உருகுவார் |
| ஈ. என்பணிந்த | - | என்பு | + அணிந்த |

4. பின்வரும் சொற்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

| | |
|---|---|
| பணிவு | - பெரியோரிடம் நாம் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டும். |
| கோவில் | - தஞ்சைப் பெரியகோவில் இராசராசனால் கட்டப்பட்டது. |
| அன்பு | - பரிசு பெற்ற மகனைத் தாய் அன்புடன் அணைத்துக்கொண்டாள். |
| மண் | - குயவன் களிமண் கொண்டு மட்பாண்டம் செய்தான். |

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

1. தென்னிந்தியாவின் ஏதென்சு என அழைக்கப்படுவது ..........................

அ. திருநெல்வேலி ஆ. தஞ்சை **இ. மதுரை**

2. மதுரை என்னும் சொல்லுக்கான பொருள்

அ. பொறுமை **ஆ. இனிமை** இ. பழைமை

3. பாண்டிய நாடு எதற்குப் பெயர் பெற்றது?

**அ. முத்து** ஆ. சோறு இ. தந்தம்

4. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை இயற்றியவர்

அ. மீனாட்சி **ஆ. குமரகுருபரர்**

**இ. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்**

5. திருவிளையாடல் புராணத்தை இயற்றியவர்

அ. இளங்கோவடிகள் ஆ. பரஞ்சோதியார் **இ. நல்லூர் நத்தத்தனார்**

6. நான்காம் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தவர்

அ. மருதுபாண்டியர் **ஆ. பாண்டித்துரையார்** இ. முத்துராமலிங்கனார்

2. பொருத்துக.

1. சேர நாடு - சான்றோர் உடைத்து
2. சோழ நாடு - முத்துடைத்து
3. பாண்டிய நாடு - வேழமுடைத்து
4. தொண்டை நாடு - சோறுடைத்து

**விடை:**

1. சேர நாடு - வேழமுடைத்து
2. சோழ நாடு - சோறுடைத்து
3. பாண்டிய நாடு - முத்துடைத்து
4. தொண்டை நாடு - சான்றோர் உடைத்து

1. தென்மதுரை - இடைச்சங்கம்
2. கபாடபுரம் - கடைச்சங்கம்
3. இன்றைய மதுரை - முதற்சங்கம்

விடை:

1. தென்மதுரை - முதற்சங்கம்
2. கபாடபுரம் - இடைச்சங்கம்
3. இன்றைய மதுரை - கடைச்சங்கம்

1. அறுவை வீதி - பொற்கடைகள்
2. கூல வீதி - ஆடைகள் விற்கும் கடைப்பகுதி
3. பொன் வீதி - தானியக் கடை
4. மறையவர் வீதி - மன்னர் வாழும் பகுதி
5. மன்னவர் வீதி - அந்தணர் வீதி

**விடை:**

1. அறுவை வீதி - ஆடைகள் விற்கும் கடைப்பகுதி
2. கூல வீதி - தானியக் கடை
3. பொன் வீதி - பொற்கடைகள்
4. மறையவர் வீதி - அந்தணர் வீதி
5. மன்னவர் வீதி - மன்னர் வாழும் பகுதி

3. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இராணி மங்கம்மாள் அமைத்த சத்திரங்களும் சாலைகளும் மதுரைக்குப் பெருமை சேர்ப்பனவாய்த் திகழ்கின்றன.
2. கையில் சிலம்புடம் உட்கார்ந்திருக்கும் உருவச்சிலை அமைந்த கோவில் செல்லத்தம்மன் கோவிலாய்க் காட்சி அளிக்கிறது.
3. மதுரை தெற்குக் கோபுரம் 160.9 அடி உயரம் உடையது.
4. நாயக்கர் மகால் மரம் பயன்படுத்தப்படாது கட்டப்பட்டுள்ளது.
5. சங்க கால மதுரை வைகை ஆற்றங்கரையில் அமைந்திருந்தது.
6. அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராய் மாணிக்கவாசகர் திகழ்ந்தார்.
7. திருஞானசம்பந்தர், கூன்பாண்டியன் காலத்தில் மதுரையில் மங்கையர்க்கரசி, குலச்சிறையார் ஆகியோர் உதவியுடன் சைவத்தைக் காத்தார்.

4. பிரித்து எழுதுக.

மூதூர் - முதுமை + ஊர்

நாற்றிசை - நான்கு + திசை

| | | | |
|---|---|---|---|
| செந்தமிழ் | - | செம்மை | + தமிழ் |
| பொற்றாமரை | - | பொன் | + தாமரை |
| தண்டமிழ் | - | தண்மை | + தமிழ் |

5. பொருள் கூறுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொறி | - | எந்திரம் | குன்று | - | சிறிய மலை |
| தடாகம் | - | குளம் | மாயோன் | - | திருமால் |
| மல்கு | - | நிறைந்த | கவின் | - | அழகு |

1. அறுவகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.

அறுவகைப் பெயர்ச்சொற்கள்

| | | |
|---|---|---|
| பொருட்பெயர் | - | செல்வி, கரும்பலகை |
| இடப்பெயர் | - | மதுரை, கோவில் |
| காலப்பெயர் | - | மார்கழித்திங்கள், மாலை |
| சினைப்பெயர் | - | கிளை, கால் |
| குணப்பெயர் | - | சதுரம், வெறுப்பு |

1. உரிய விடையைத் தேர்வு செய்க.

1. மதுரை என்பது ..................................

அ. காலப்பெயர் ஆ. குணப்பெயர் **இ. இடப்பெயர்**

2. பூங்கொடி பூப்பறிக்கிறாள் - இத்தொடரிலுள்ள 'பூ' என்பது ............................

அ. பொருட்பெயர் **ஆ. சினைப்பெயர்** இ. தொழிற்பெயர்

3. சதுரம் என்பது ..............................

அ. பொருட்பெயர் ஆ. காலப்பெயர் **இ. குணப்பெயர்**

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற பெயர்ச்சொற்களை எழுதுக.

1. <u>கொடி</u> அசைகிறது
2. கோவிலில் <u>பூசை</u> நடக்கிறது.
3. <u>நாளை</u> பள்ளிக்கு விடுமுறை.
4. <u>பானை</u> உடைந்துவிட்டது.

1. பிரித்து எழுதுக.

உயிரெல்லாம் - உயிர் + எல்லாம்

அயனுக்காக்கினான் - அயனுக்கு + ஆக்கினான்

2. பொருள் கூறுக.

பார் - உலகம்

வியன் - பெருமை

ஆரணங்கள் - வேதங்கள்

உரிய விடையைத் தேர்வு செய்க.

1. அம்மானை என்பது .......................... விளையாடும் விளையாட்டு.

அ. ஆண்கள் **ஆ. பெண்கள்** இ. குழந்தைகள்

2. அம்மானைப்பாடலில் போற்றப்படும் தெய்வம்

அ. சிவன் ஆ. நான்முகன் **இ. முருகன்**

3. முருகனால் சிறையிலிடப்பட்டவன்

**அ. நான்முகன்** ஆ. சிவன் இ. திருமால்

1. உரிய விடையைத் தேர்வு செய்க

1. மயிலுக்கு போர்வை போத்திய வள்ளல்

**அ. பேகன்** ஆ. பாரி இ. ஓரி

2. பூக்களுள் சிறந்த பூ பருத்திப்பூ எனக் கூறியவர்

அ. அறிஞர் அண்ணா ஆ. தந்தை பெரியார் **இ. திரு.வி.க**

2. பொருத்துக.

காஞ்சி - சுங்குடிப் புடைவைகள்

திருப்பூர் - கண்டாங்கிச் சேலைகள்

மதுரை - போர்வைகள்

உறையூர் - பின்னலாடைகள்

சென்னிமலை - பட்டாடைகள்

**விடை** :

காஞ்சி - பட்டாடைகள்

திருப்பூர் - பின்னலாடைகள்

மதுரை - சுங்குடிப் புடைவகள்

உறையூர் - கண்டாங்கிச் சேலைகள்

சென்னிமலை - போர்வைகள்

பிரித்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| பருத்திப்பூ | - | பருத்தி | + | பூ |
| பஞ்சாக்கி | - | பஞ்சு | + | ஆக்கி |
| ஓரிழை | - | ஓர் | + | இழை |
| வண்ணமூட்டல் | - | வண்ணம் | + | ஊட்டல் |
| கரையழகு | - | கரை | + | அழகு |
| மணமூட்டல் | - | மணம் | + | ஊட்டல் |
| பின்னலாடை | - | பின்னல் | + | ஆடை |
| பழங்காலம் | - | பழமை | + | காலம் |
| எதுவென | - | எது | + | என |
| பட்டாடை | - | பட்டு | + | ஆடை |
| நிகரில்லை | - | நிகர் | + | இல்லை |

பொருள் கூறுக.

உற்ற துணை - பொருந்திய துணை, சிறந்த துணை.

பாவு நூல் - தறியில் இணைக்கப்பட்டிருக்கும் நீளமான பகுதி

ஊடை - பாவின் ஊடே செல்லும். பாவின் ஊடே செல்லும் அந்த ஊடைக்குழலில் கல் பொருத்தப்பட்டிருக்கும்.

கலிங்கம் - ஆடை

பிணைத்தல் - சேர்த்தல்

3. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

ஏட்டுச்சுரைக்காய் : ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்னும் பழமொழி, புத்தக அறிவோடு அனுபவ அறிவும் தேவை என்பதை உணர்த்துகிறது.

பழக்கம் : பிறந்த நாள் பரிசாய்ப் புத்தகத்தைக் கொடுக்கும் பழக்கத்தை நாம் பின்பற்ற வேண்டும்.

கோடிட்ட இடங்களை நிரப்புக

1. திரைக்கவித் திலகம் எனப் பாராட்டப்படும் கவிஞர் மருதகாசி
2. கலம்பக உறுப்புகளின் எண்ணிக்கை பதினெட்டு
3. ஈசான தேசிகரின் மற்றொரு பெயர் சுவாமிநாத தேசிகர்

4. திரு. வி.க கூறிய சிறந்த பூ பருத்திப்பூ
5. நிலைத்த செல்வம் கல்விச் செல்வமாகும்.
6. செயல் முடிந்ததனைக் குறிக்கும் சொல் வினைமுற்று ஆகும்.

1. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பாடத்தில் குறிப்பிடப்படும் வேளாண் பல்கலைக்கழகம் உள்ள இடம்

அ. மதுரை ஆ. சென்னை **இ. கோவை**

2. வேளாண்தொழிலில் உள்ள கூறுகள்

அ. இரண்டு ஆ. நான்கு **இ. ஆறு**

3. வானம் பார்த்த பூமி என்பது

அ. நன்செய் **ஆ. புன்செய்** இ. பொன்செய்

4. கேட்காத கடனும் பார்க்காத பயிரும்..................

**அ. பாழ்** ஆ. பால் இ. பாள்

5. பஞ்சகவ்வியம் என்பது ...................... பொருள்களால் ஆனது.

அ. மூன்று ஆ. நான்கு **இ. ஐந்து**

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வருமுன் காப்போம் என்பது முதுமொழி
2. வேளாண்மைத்துறையில் இயற்கை வேளாண்மைக்கு ஒரு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.
3. நாற்று விடுவதற்கு உரிய நிலத்தை நாற்றங்கால் என்பர்.
4. இயற்கை வேளாண்மையை அங்கக வேளாண்மை என்றும் கூறுவர்.

3. பொருத்துக.

1. நெல் - வண்டியோட
2. கரும்பு - நண்டோட
3. வாழை - தேரோட
4. தென்னை - ஏரோட

விடை:

1. நெல் - நண்டோட
2. கரும்பு - ஏரோட
3. வாழை - வண்டியோட

4. தென்னை - தேரோட

4. பொருள் கூறுக

| | | |
|---|---|---|
| தொடி | - | ஒரு பலம் (நிறுத்தல் அளவு) |
| கஃசு | - | கால் பலம் (நிறுத்தல் அளவு) |
| மிஞ்சாது | - | மீதி இராது |
| மோகம் | - | மயக்க உணர்ச்சி, ஆசை |
| முதுமொழி | - | பழமொழி |
| சான்றளிப்பு | - | கொடுக்கப்பட்ட செய்தி உண்மையானது என்று அதிகாரி கையொப்பம் இட்டு முத்திரையிட்டு அளித்தல் |
| பணி | - | வேலை |

5. எதிர்ச்சொல்

| | | |
|---|---|---|
| இயற்கை | x | செயற்கை |
| அரிது | x | எளிது |
| நன்செய் | x | புன்செய் |

அ. பிற மொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக்குதல்

| அயற்சொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|
| அசல் | - | முதல் |
| அபாயம் | - | பேரிடர் |
| அனுபவம் | - | பட்டறிவு |
| ஆயுள் | - | வாழ்நாள் |
| உபாத்தியாயர் | - | ஆசிரியர் |
| கர்வம் | - | செருக்கு |
| கிராமம் | - | சிற்றூர் |
| கைதி | - | சிறையாளி |
| சபை | - | அவை |
| சாதம் | - | சோறு |
| சிபாரிசு | - | பரிந்துரை |
| சேவை | - | தொண்டு |

| | | |
|---|---|---|
| ஜாக்கிரதை | - | விழிப்பு |
| தகவல் | - | செய்தி |
| தினம் | - | நாள் |
| நிபுணர் | - | வல்லுநர் |
| பத்திரிகை | - | செய்தித்தாள் |
| பூஜை | - | வழிபாடு |
| பேட்டி | - | நேர்காணல் |
| விபூதி | - | உரையாடல் |
| வைத்தியர் | - | மருத்துவர் |

அ. பிறமொழிச் சொற்களை நீக்கி, அவற்றிற்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

1. இந்த வேலையில் சேர என்ன அந்தஸ்து உள்ளது?

**விடை:** இந்த வேலையில் சேர என்ன அந்தஸ்து உள்ளது?

2. கொடுங்கோல் அரசன் அக்ரமம் செய்தான்.

**விடை:** கொடுங்கோல் அரசன் கொடுமை செய்தான்.

3. ஆகாசத்தில் பட்சி பறந்தது.

**விடை:** விண்ணில் பறவை பறந்தது.

4. புஷ்பமின்றி அபிஷேகம் உண்டா?

**விடை:** மலரின்றி நன்னீராட்டு உண்டா?

5. குழந்தைக்குக் கண்திருஷ்டி, சுற்றிப்போடு.

**விடை:** குழந்தைக்குக் கண்ணேறு பட்டுவிட்டது, சுற்றிப் போடு.

ஆ. தமிழெண்களின் கூடுதல் காண்க.

| கூட்டல் கூடுதல் | விடை |
|---|---|
| 1. க + க = | உ |
| 2. ச + ரு = | ச |
| 3. உ + ங = | ரு |
| 4. ச + க = | க0 |

1. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. விளையாட்டின் அடிப்படை நோக்கம் <u>போட்டியிடுதல்</u> ஆகும்.

2. தமிழ்ர்களின் தற்காப்புக் கலைகளுள் ஒன்று சிலம்பாட்டம்.

3. முல்லை நிலத்தில் ஏறு தழுவுதல் என்னும் வீர விளையாட்டு நடைபெற்றது.

4. மகளிர் விளையாட்டுகள் பெரும்பாலும் அகவிளையாட்டுகள், ஆடவர் விளையாட்டுகள் புறவிளையாட்டுகள் ஆகும்.

5. உறந்தையூரில் வீரக்கோழிகள் சிறந்திருந்தமையால் கோழியூர் என்று அதற்குப் பெயர் அமைந்தது.

6. ஏறு தழுவுதல் விளையாட்டு இன்று சல்லிக்கட்டாகவும், மஞ்சுவிரட்டாகவும் அறியப்படுகின்றது.

7. தமுக்கம் மண்டபம் யானைப்போர் காண்பதற்குரிய திடம் ஆகும்.

2. பொருத்துக.

| விளையாடுவோர் | | விளையாட்டு |
|---|---|---|
| 1. ஆடவர் | - | ஓரையாடுதல் |
| 2. மகளிர் | - | பூப்பறித்தல் |
| 3. சிறுவர் | - | ஏறு தழுவுதல் |
| 4. சிறுமியர் | - | கிட்டிப்புள் |

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. ஆடவர் | - | ஏறு தழுவுதல் |
| 2. மகளிர் | - | ஓரையாடுதல் |
| 3. சிறுவர் | - | கிட்டிப்புள் |
| 4. சிறுமியர் | - | பூப்பறித்தல் |

3. பிரித்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| ஓரினம் | - | ஓர் | + இனம் |
| பூப்பறித்தல் | - | பூ | + பறித்தல் |
| முற்காலம் | - | முன் | + காலம் |
| மற்களம் | - | மல் | + களம் |
| இயந்திரக்காலம் | - | இயந்திரம் | + காலம் |
| தற்காப்பு | - | தன் | + காப்பு |
| சான்றிதழ் | - | சான்று | + இதழ் |
| விருப்புற்று | - | விருப்பு | + உற்று |

4. சேர்த்து எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| தொழுவில் | + இருந்து | - | தொழுவிலிருந்து |
| கொழுமை | + உற்ற | - | கொழுமையுற்ற |
| சேவல் | + போர் | - | சேவற்போர் |
| சிலம்பு | + ஆட்டம் | - | சிலம்பாட்டம் |
| முன் | + உரிமை | - | முன்னுரிமை |

5. பொருள் கூறுக

பட்டறிவு - அனுபவ அறிவு

மேன்மை - உயர்வு

முல்லை நிலம் - காடும் காடு சார்ந்த பகுதியுமாகிய நிலம்

கொழுமை - செழிப்பு, வளமை

தொழுவம் - மாடுகளைக் கட்டிவைக்கும் இடம்

தெம்பு - உடல்வலிவு, கர்வம்

வேட்கை - விருப்பம்

உறியடித்தல் - கண்ணன் உறியிலிருந்து வெண்ணெய் எடுத்ததைக் கொண்டாடும் திருவிழா - விளையாட்டு

உற்சாகம் - மகிழ்ச்சி

மூதாதையர் - முன்னோர்

வழுக்குமரம் - எண்ணெய் தடவப்பட்ட வழுவழுப்பான பெரிய கம்பம்.

1. வினவியவாறு சொற்றொடர்களை மாற்றுக.

1. பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளன. - இந்தச் செய்திச் சொற்றொடரை வினாச் சொற்றொடாராய் மாற்றுக.

**விடை** : பூம்புகார்ச் சிற்பங்கள் மிகவும் அழகாய் உள்ளனவா?

2. 'அறம் செய்' - இக்கட்டளைச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : அறம் செய்ய வேண்டும்.

3. முயன்றால் முடியாததும் உண்டோ? - இவ்வினாச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : முயன்றால் முடியாதது இல்லை.

4. முயற்சி செய்ய வேண்டும் - கட்டளைச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : முயற்சி செய்.

5. வள்ளுவரை அனைவரும் அறிவர் - வினாச் சொற்றொடராய் மாற்றுக

**விடை** : வள்ளுவரை அனைவரும் அறிவரோ?

6. இசையின் இனிமையை அறியாதார் யார்? - செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : இசையின் இனிமையை அனைவரும் அறிவர்.

7. மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுதினர் - வினாச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுதினரா?

8. குடியரசுத் தலைவர் சென்னைக்கு வருகை தந்தார் - இந்தச் செய்திச் சொற்றொடரை வினாச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : குடியரசுத் தலைவர் சென்னைக்கு வருகை தந்தாரா?

9. ஆ! வானத்து விண்மீன்கள் என்னே அழகு! - இந்த உணர்ச்சிச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடரை வினாச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : வானத்து விண்மீன்கள் அழகாய் உள்ளன. (செய்திச் சொற்றொடர்)

வானத்து விண்மீன்கள் அழகாய் உள்ளன அன்றோ? (வினாச்சொற்றொடர்)

10. ஐயோ!பேரறிஞர் அண்ணா மறைந்தாரே! - இந்த உணர்ச்சிச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : பேரறிஞர் அண்ணா மறைந்தார்.

11. மாணவர்கள் சீருடையில் பள்ளிக்கு வருக. - இக்கட்டளைச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : மாணவர்கள் சீருடையில் பள்ளிக்கு வரவேண்டும்.

12. அனைவரும் தாய்மொழியைப் போற்றுக - இந்தக் கட்டளைச் சொற்றொடரைச் செய்தி சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : அனைவரும் தாய்மொழியைப் போற்ற வேண்டும்.

13. குழந்தைக்கு என்ன தெரியும்? இவ்வினாச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : குழந்தைக்கு ஒன்றும் தெரியாது

14. உண்மைக்கு அழிவில்லை அல்லவா? - இவ்வினாச் சொற்றொடரைச் செய்திச் சொற்றொடராய் மாற்றுக.

**விடை** : உண்மைக்கு அழிவில்லை.

15. செய்திச் சொற்றொடராய் மாற்றுக - நாள்தோறும் உடற்பயிற்சி செய்க.

**விடை** : நாள்தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

16. வினாச் சொற்றொடராய் மாற்றுக - திருவள்ளுவர் சிலை அழகாய் உள்ளது.

**விடை** : திருவள்ளுவர் சிலை அழகாய் உள்ளது அன்றோ?

17. கட்டளைச் சொற்றொடராய் மாற்றுக - ஒவ்வொரு மிக அழகாய் உள்ளது.

**விடை** : ஒவ்வொரு நாளும் செய்தித்தான் படி.

18. உணர்ச்சிச் சொற்றொடராய் மாற்றுக - ஓவியம் மிக அழகாய் உள்ளது.

**விடை** : ஆ! ஓவியம் எவ்வளவு அழகாய் உள்ளது!

1. கீழுள்ள சொற்றொடரை வகைப்படுத்துக.

1. காந்தியடிகள் தீண்டாமையை எதிர்த்துப் போராடினார்.

**விடை** : செய்திச் சொற்றொடர்

2. உன்னிடம் திருக்குறள் புத்தகம் இருக்கிறதா?

**விடை** : வினாச் சொற்றொடர்

3. தொல்காப்பியன் வீட்டுக்கு வந்திலன்

**விடை**: எதிர்மறைச் சொற்றொடர்

4. என்னே, தாஜ்மகாலின் அழகு!

**விடை**: உணர்ச்சிக் சொற்றொடர்.

5. வீட்டைத் தூய்மையாய் வைத்திரு.

**விடை**: கட்டளைச் சொற்றொடர்

1. கீழுள்ள சொற்றொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1. மாற்றுத் திறனாளியரை மதித்தல்வேண்டும். (கட்டளைத் தொடராக்குக)

**விடை** : மாற்றுத்திறனாளியரை மதி

2. உழைப்பின்றி ஊதியம் இல்லை. (உடன்பாட்டுத் தொடராக்குக.)

**விடை** : உழைப்பிற்கு ஊதியம் உண்டு

3. நான் திருக்குறள் படித்தேன். (வினாத்தொடராக்குக)

**விடை** : நீ திருக்குறளைப் படித்தாயா?

4. அந்தோ, குழந்தை கீழே விழுந்துவிட்டதே! (செய்தித் தொடராக்குக.)

**விடை** : குழந்தை கீழே விழுந்துவிட்டது.

5. உன் கையெழுத்து மிகவும் அழகாய் உள்ளது. (உணர்ச்சித் தொடராக்குக.)

**விடை** : ஆ! உன் கையெழுத்து மிகவும் அழகாய் உள்ளதே!

1. கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் குறிக்கும் ஓரெழுத்து ஒரு மொழிகளை எடுத்து எழுதுக.

(ஏ, தீ, கோ, பூ, ஐ, சோ)

விடை

1. அரண் - சோ
2. அரசன் - கோ
3. அம்பு - ஏ
4. தலைவன் - ஐ
5. நெருப்பு - தீ
6. மலர் - பூ

2. அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருளை உரிய கட்டத்தில் நிரப்புக.

(பாடல், சோலை, வருக, பசு, கொடு, திங்களின் பெயர்)

**விடை**

1. கா - சோலை
2. தா - கொடு
3. தை - திங்களின் பெயர்
4. பா - பாடல்
5. வா - வருக
6. ஆ - பசு

கீழ்க்கண்டவற்றில் அடிக்கோடிட்ட கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.

(கண்விழித்து, வியர்வை, ஆற்றங்கரை, பிட்டு விற்று, வெண்கலம், வயிற்றுப்பிழைப்பு, வேண்டும்)

ஆத்தங்கரைக்கு மேற்கே உள்ளது அந்த அழகிய சிற்றூர். அவ்வூரில் தனித்து வாழும் இசக்கிக் கிழவிக்கு உதவுவதற்கு யாரும் இல்லை. முதுமையினால் உடலும் நடையும் தளர்ந்து போனவள். அதற்காக யாரிடமும் கையேந்தி வாழ விரும்பாதவள். வேர்வை சிந்தி உழைத்து உண்ண வேண்டும் என்று எண்ணுபவள். இதற்காகப் புட்டுவித்துத் தன் வயித்துப்பிழைப்பைத் தேடிக் கொண்டாள். வெங்கலப் பாத்திரத்தில் வைத்திருக்கும் அவள் சமைத்த புட்டை உண்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேணும். ஊர்த்திருவிழா நாள்களில் புட்டுக்காகக் கூட்டம் அலை மோதும். அந்நாள்களில் இரவெல்லாம் கண் முழித்துப் புட்டு சமைப்பதற்கான வேலைகளைச் செய்வாள்.

| **கொச்சைச் சொற்கள்** | | **திருத்தப்பட்ட சொற்கள்** |
|---|---|---|
| ஆத்தங்கரைக்கு | - | ஆற்றங்கரைக்கு |
| வேர்வை | - | வியர்வை |
| புட்டு வித்து | - | பிட்டு விற்று |
| வயித்துப்பிழைப்பை | - | வயிற்றிப்பிழைப்பை |
| வெங்கலம் | - | வெண்கலம் |
| வேணும் | - | வேண்டும் |
| கண் முழித்து | - | கண் விழித்து |

1. உரிய எழுத்துகளை நிரப்பிப் பழமொழிகளை உருவாக்குக.

1. இ......க்கும் காலம் வந்தால் பிறக்கும் ஈசலுக்கும் சி.........கு. (ற, ற)

**விடை** : இறக்கும் காலம் வந்தால் பிறக்கும் ஈசலுக்கும் சிறகு.

2. எ...........ம்புக்குத் தெரியாத க.......ம்பு இல்லை (று, ரு)

**விடை** : எறும்புக்குத் தெரியாத கரும்பு இல்லை

3. அ.........ண்மனை உறவைக்காட்டிலும் அடுக்களை உ.........வு மேல். (ற, ர)

**விடை** : அரண்மனை உறவைக்காட்டிலும் அடுக்களை உறவு மேல்.

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சிவபெருமான் விரும்பிச் சூடும் பூ <u>ஊமத்தம் பூ</u>
2. தமிழரின் வீர விளையாட்டு <u>மற்போர்</u>
3. விளையாட்டின் அடிப்படை நோக்கம் <u>போட்டியிடுதல்</u>

2. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பகுபத உறுப்புகளின் எண்ணிக்கை

அ. 4 **ஆ. 6** இ. 8 ஈ. 10

2. கீழுள்ளவற்றுள் எழுத்துத்தொடர் மொழி எது?

அ. பூ ஆ. கை இ. தை **ஈ. வீடு**

3. சேவல் என்பதன் எதிர்ப்பால் பெயர் என்ன?

**அ. பேடு** ஆ. குட்டி இ. கன்று ஈ. குருளை

4. 'வேர்வை' என்பதன் திருந்திய சொல்

அ. வேற்வை ஆ. வேர்த்தல் **இ. வியர்வை** ஈ. வியற்வை

5. அரசனைக் குறிக்கும் ஓரெழுத்து ஒருமொழி ..........................

அ. பூ **ஆ. கோ** இ. கா ஈ. ஆ

3. குறட்பாவை நிறைவு செய்க.

தொட்டனைத்து ஊறும் .......................... மாந்தர்க்குக்

கற்றனைத்து ஊறும் ..............................

**விடை:**

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத்து ஊறும் அறிவு.

Winmeen